**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை – 2013**

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, தேறிய சொத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது

அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 அதிகாரசபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(3) ஆம் பிரிவில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருக்க வேண்டியதுடன் அது பகுதிகளாக அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டு பூர்த்தியடையும் வரை அதிகாரசபைக்கு மூலதனம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 16(உ) உப பிரிவில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் செலவு குறைந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பணம் வழங்குவதவற்காக ஆதனங்கள் அபிவிருத்தி செய்பவர்களின் சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்படும் அனைத்து பணமும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியத்திற்குச் செலவுவைக்கப்படல் வேண்டிய போதிலும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 10/2951/504/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இச் சேவைக் கட்டணத்தினை அறவிடுதல் நிறுத்தப்பட்டுள்ளமையினால் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய பிரதான வருமான மார்க்கம் இழக்கப்பட்டிருந்தது. இதன் படி திறைசேரியின் அல்லது அரசாங்கத்தின் ஏனைய நிதி உதவியின்றி அதிகாரசபையைத் தொடர்ந்து நடாத்துதல் நிச்சயமற்ற நிலையில் இருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு நியமம்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 1 இன் படி நிதிக்கூற்றுகளுக்குரிய சகல தகவல்களும் ஒப்பிடக்கூடிய வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஐந்தொகையிலும் வருமானச் செலவினக் கணக்கிலும் குறிப்பாகக் காண்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்குரிய முன்னைய ஆண்டின் தொகைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 2 இன் படி மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டின் மாற்றங்களுடன் தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நியமத்திற்கு முரணாக ரூபா 4,605,241 தொகையான பணிக்கொடை ஒதுக்கீடுகள் மற்றும் பிற்போட்ட வருமான மானியமாக ரூபா 199,332,113 தொகையான நடைமுறைப் பொறுப்புக்களும், தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சஹஸ்புர மற்றும் சிங்ஹபுர வீடமைப்பு செயற்திட்டத்தில் பழுதுபார்த்தல்களுக்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பெறப்பட்ட ரூபா 13,761,694 தொகை நடைமுறைப் பொறுப்பாகவும், ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 13,766,209 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் நடைமுறைப் பொறுப்பாகவும் கணக்கு வைக்கப்படாமல் அதற்குப் பதிலாக அந்தப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்பட்டு ரூபா 4,515

தொகையான வேறுபாடு அபிவிருத்திச் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய அங்குலான கட்டம் I, கட்டம் II மற்றும் லுணாவ போன்ற செயற்திட்டங்களுக்குரிய விலைப்படியல்களின் பெறுமதி சேர் வரியுடன் உறுதிப்படுத்தப்பட்ட வேலைப்பெறுமதியை விட வேறுபட்ட பெறுமதியில் கணக்குவைக்கப்பட்ட காரணத்தால் நடைமுறை வேலைகளின் பெறுமதியில் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் நடைமுறை வேலைகளின் பெறுமதி ரூபா 69,656,856 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வீடுகளை வழங்காத அங்குலான வீடமைப்புத் திட்டத்தில் 33 வீட்டு நலனாளிகளுக்காகக் கிடைத்த ரூபா 9,900,000 தொகையான முற்பணம் முன்கொண்டுவரப்பட்ட முற்பணமாக (Receipt in Advance) கணக்கு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க மானியத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட அனுராதபுரம் வீடமைப்பு செயற்திட்டத்தின் கிரயம் ரூபா 50,386,790 தொகையான 63 வீடுகள் ரூபா 39,713,310 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ஏற்பட்ட நட்டம் ரூபா 10,673,480 தொகை மானியத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. கிரயம் நடைமுறை வேலைக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு அறவிட வேண்டிய தொகை வீட்டுக் கடன்பட்டோர் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டிய தவணைப் பணம் ரூபா 940,500 மாத்திரம் நடைமுறை வேலைக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் படி நடைமுறை வேலைக் கணக்கில் ரூபா 38,722,810 தொகை அதிகமாகவும் வீட்டுக் கடன்பட்டோர் கணக்கு ரூபா 39,713,310 தொகை குறைவாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) அனுராதபுரம் வீடமைப்புத்திட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட 63 வீடுகளில் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 217,551 தொகையான வீடமைப்பு கடன் தவணைப் பணம், அதிகாரச்சட்டதின் படி நிதியத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வீடமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காகக் கிடைத்த ரூபா 1,408,558,466 தொகையான அரசாங்கத்தின் மானியம் நடைமுறையல்லாப் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) கீழே காண்பிக்கப்படுகின்ற பிரகாரம், காசுப்பாய்ச்சல் கூற்றில் சில விடயங்கள் ஏனைய கூற்றுக்களுடன் இணங்கியிருக்கவில்லை.

i. வருமானச் செலவினக் கணக்கில் செயற்பாட்டு வருமானமாகக் காண்பிக்கப்பட்ட அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 28,240,483 தொகை

காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாட்டிற்கான பெறுவனவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

ii. காசுப்பாய்ச்சல் கூற்றின் படி நிலையான சொத்துக்களின் கொள்வனவுப் பெறுமதி ரூபா 1,409,483 ஆக இருந்த போதிலும் ஐந்தொகையில் குறிப்பு இல. 1 இன் படி அப்பெறுமதி ரூபா 764,013 ஆக இருந்தது. அதன் படி ரூபா 645,470 தொகையான வேறுபாட்டிற்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஏ) அங்குலான வீடமைப்புச் செயற்திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களில் ரூபா 45,491,256 தொகையான நிறுத்தி வைத்தல் பணம் வங்கி பிணைப்பொறுப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் எவ்வித வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

2012 திசெம்பர் 24 ஆந் திகதிய 49 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக 2012 நிதியாண்டில் பெற்ற இலாபத்தின் அடிப்படையில் அரசாங்க கூட்டுத்தாபன ஊழியருக்குச் செலுத்த வேண்டிய மிகையூதியப் பணமான ரூபா 10,000 இற்குப் பதிலாக ரூபா 12,500 படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன்படி ரூபா 2,500 படி 92 ஊழியர்களுக்கு ரூபா 230,000 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,032,874 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 11,619,000 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,586,126 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக வருமானம் ரூபா 14,610,184 இனால் குறைவடைந்தமை மற்றும் நிருவாகச் செலவினம் ரூபா 2,683,335 இனால் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

2007 பெப்ரவரி 22 ஆந் திகதிய அமப/07/0140/226/013 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி நகரக் குடியிருப்பு அதிகாரசபை உருவாக்கப்பட்டதுடன் உடனடியாக

றியல் எஸ்டேட் எக்ஸ்வென்ஜ் தனியார் கம்பனி கலைக்கப்பட்டு அக்கம்பனியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பதவியணியினரும் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 நவம்பர் மாதம் வரையிலும் பதவியணியின் உள்ளீர்ப்பு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.2 நோக்கத்திற்கு முரணான செலவினம்

ஜனசெவன சுயசக்தி பங்குபற்றலுடன் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 40 மில்லியன் அனுராதபுரம் வீடமைப்புச் செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 2,145,123 தொகை, போக்குவரத்துச் செலவினம் ரூபா 7,060,430 தொகை மற்றும் செயற்திட்ட திறப்புவிழாச் செலவினம் ரூபா 4,828,670 தொகையாக ரூபா 14,034,223 கூட்டுத்தொகை நோக்கத்திற்கு முரணாக செலவிடப்பட்டிருந்தன.

### 4.3 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 111 ஆக இருந்ததுடன் அங்கீகரிக்கப்படாத 11 ஊழியர்களை உள்ளடக்கி சேவையில் ஈடுபடுத்தியிருந்தவர்களின் எண்ணிக்கை 98 ஆகும். அதன் படி வெற்றிடங்கள் 24 ஆகும்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2011 முதல் 2016 ஆம் காலப்பகுதிக்குரியதாகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின்படி நோக்க இலக்கம் 5 இன் கீழ் உரிய காலப்பகுதியின் போது ரூபா 3,000 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் கொழும்பு மற்றும் அண்மித்த பிரதேசங்களில் 1000 வீடுகள் மற்றும் ஏனைய நகரப் பிரதேசங்களில் 2,000 வீடுகள் என்பவற்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி அந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 700 மில்லியன் கிரய மதிப்பீட்டுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி, கொழும்பு மற்றும் அண்மித்த பிரதேசங்களில் 1000 வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் லுனாவை, அங்குலான, சிலாபம் மற்றும் தலவாக்கலை போன்ற ஏனைய நகர பிரதேசங்களில் 764 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 606 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், கூட்டிணைந்த திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டிராததுடன் கூட்டிணைந்த திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களை நிறைவேற்றும் செயல்முன்னேற்றம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட தகவல்களுக்கும் உள்ளபடியான தகவல்களுக்குமிடையே கருத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு வினைத்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.3 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்**

2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான வருடங்களுக்குரிய ஆண்டறிக்கை 2014 ஆகஸ்ட் மாதம் வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

i. வங்கி இணக்கக்கூற்றுக்களைத் தயாரித்தல்
ii. கணக்கு வைத்தல்
iii. கிரயக் கட்டுப்பாடு
iv. வாகனப் பயன்பாடு
v. பதவியணியினர் நிருவாகம்
vi. ஒப்பந்த நிருவாகம்
vii. செயல்முன்னேற்ற மீளாய்வு